Crl.Misc.39

D E P O S I T I O N O F W I T N E S S
( Chapter XXIII Code of Criminal Procedure.)
IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE,
THIRUKALUKUNDRAM.

Case No. CC.14/2025

**P.W**.7(LW5)

| | |
|---|---|
| Name | : திரு.ராஜேஷ் |
| Father/Husband Name | : திரு.அழகேசன் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

எதிரி ஆஜரில் உள்ளார்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.02.2026

முதல் விசாரணை – சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். நான் தற்போது திருக்கழுக்குன்றத்தில் குடியிருந்து போட்டோ ஸ்டுடியோவில் வேலை செய்து வருகிறேன். சாட்சி தேவேந்திரன் என் தம்பி ஆவார். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 2வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான்.

2) சுமார் 2 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் சொந்த வேலை சம்மந்தமாக சென்றுவிட்டு மங்களம் அருகே வந்துக் கொண்டிருந்த போது போலிசார் நின்றுக் கொண்டிருந்தார்கள். அந்த இடத்தில் விபத்து ஏற்பட்டதாக சொன்னார்கள். என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். அவர்கள் விபத்து நடந்த இடத்தை பார்வையிட்டு படம் வரைந்தார்கள். அதில் நான் சாட்சியாக கையொப்பம் செய்தேன். என்னிடம் காட்டப்படும் கையொப்பம் என்னுடையது தான். **(பார்வை மகசர் அசா.ஆ.2 ஆக குறியீடு**

**செய்யப்படுகிறது)** போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை,</u>**

நானும் என் தம்பியும் திருக்கழுக்குன்றம் பேருந்து நிலையத்தில் போட்டோ ஸ்டுடியோ வைத்துள்ளோம். இரண்டு வருடங்களுக்கு முன்பு பொதுவாக ஏதேனும் பிரச்னை நடந்ததால் திருக்கழுக்குன்றம் காவல் நிலையத்தில் இருந்து என்னுடைய போட்டோ ஸ்டுடியோவிற்கு வந்து புகைப்படம் எடுக்க சொல்லி என்னை அழைப்பார்கள் என்றால் சரிதான். காவல் நிலையத்தில் எனக்கும் என் தம்பிக்கும் பழக்கம் உள்ளது என்றால் சரிதான். நான் கையொப்பம் செய்த ஆவணத்தில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது. போலிசார் என் முன்னிலையில் பார்வை மகசரை தயார் செய்யவில்லை என்றாலும் காவல் நிலையத்தில் வைத்து என்னிடம் கையொப்பம் பெற்றுள்ளார்கள் என்றாலும் சரியல்ல. நான் தவறான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open Court read over in the witness in the present of the accused and admitted by the witness to be correct.

(Sd)S.Vineeth
J.M./TKM.